# *மாணவர்களின் கல்வி மீது குடும்பங்களின் பொருளாதார நிலை ஏற்படுத்திய தாக்கம் (பொன்னாவெளி கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட ஆய்வு)*

*விதுஜா. ப*[1], *விஜயகுமார். சி*[2]

***பொருளியற் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்***[1, 2]

*vithujaparameswaran@gmail.com*[1], *vijai114@gmail.com*[2]

***ஆய்வு சுருக்கம்*** *- ஒரு நாட்டின் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு கல்வி மற்றும் திறன்கள் இன்றியமையாதவையாகும். இந்த வகையில் இலங்கையில் கல்வியறிவு மேம்பாட்டிற்காக இலவச கல்வியை வழங்கிவருகின்ற போதும் மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் பின்னடைவதற்கு பலதரப்பட்ட பொருளாதார மற்றும் சமூக காரணிகள் முக்கியபங்கு வகிக்கின்றன. இவ்வாய்வின் பிரதான நோக்கம் மாணவர்களின் கல்வி மீது பொன்னாவெளி கிராமசேவகர் பிரிவிலுள்ள குடும்பங்களின் பொருளாதார மற்றும் சமூக நிலை ஏற்படுத்திய தாக்கத்தினை மதிப்பிடுதலாகும். இதற்காக வினாக்கொத்துக்கள் உருவாக்கப்பட்டு அதன் மூலமே தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பொன்னாவெளி கிராம சேவகர் பிரிவிலுள்ள இரண்டு பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு ஒரு பாடசாலையில் இருந்து மாணவர்கள் கல்விகற்கும் 70 குடும்பங்களும், மற்றைய பாடசாலையில் இருந்து 70 குடும்பங்கள் என்ற அடிப்படையில் மொத்தமாக 140 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. தரவுகளானவை விபரண பகுப்பாய்வு, இணைவுப் பகுப்பாய்வு மற்றும் பிற்செலவுப் பகுப்பாய்வு முறைகள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வு கண்டுபிடிப்பு முடிவுகளின் படி ஆய்வு பிரதேசத்திலுள்ள மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை உயர்த்துவதில் பொருளாதார மற்றும் சமூக காரணிகள் குறிப்பிடத்தக்களவு உயர்வான பங்களிப்பினை வழங்குகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் பொருளாதார காரணிகளின் சராசரி பெறுமதி 3.90 ஆகவும், சமூக காரணிகளின் சராசரி பெறுமதி 3.91 ஆகவும் காணப்படுகிறது. அத்துடன் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் குடும்பங்களின் நடைமுறை வருமானம் உயர்வான பங்களிப்பினை வழங்குகின்றமையும்*

*கண்டறியப்பட்டுள்ளது. பிற்செலவு கண்டுபிடிப்பு முடிவுகளின்படி நடைமுறை வருமானம், ஏனைய சொத்துக்கள் மற்றும் சேமிப்பு மட்டம் போன்ற மாறிகளில் ஏற்படுத்தப்படும் 1 அலகு அதிகரிப்பானது மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தில் முறையே 0.659, 0.305, 0.582 அலகு அதிகரிப்பினையும், பெற்றோர் மற்றும் சகோதரர்களின் கல்வித்தகமை, குடும்ப சூழல், அதிபர் மற்றும் ஆசிரியர்களின் முகாமைத்துவம், பாடசாலையிலுள்ள வளங்கள் என்பனவற்றின் 1 அலகு அதிகரிப்பானது மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தில் முறையே 0.560, 0.402, 0.158, 0.287 அலகு அதிகரிப்பினை ஏற்படுத்துகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே இவ்வாய்வின்படி இப்பிரதேசத்திலுள்ள குடும்பங்களின் பொருளாதார மற்றும் சமூக காரணிகளில் முன்னேற்றம் ஏற்படும் பட்சத்தில் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்திலும் முன்னேற்றம் ஏற்படுத்தப்படும் எனலாம்.*

**திறவுச் சொற்கள் -** *குடும்ப பின்னணி, குறைந்த வருமானம், சகோதரர்களின் கல்வித்தரம், மாணவர் கல்வி அடைவு.*

## அறிமுகம்


*நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி என்பது உற்பத்தி துறைகளுக்கு உதவுகின்ற இயந்திரம் மற்றும் பொறிகளில் முதலீடு செய்வதில் தங்கியுள்ளது. இதேபோல இவற்றை திறமையாக இயக்கக் கூடியவர்களாக மனிதர்களை முன்னேற்ற வேண்டும். கல்வி மூலமாக மனிதனை திறன்மிக்கவராக்கினால் அபிவிருத்தி ஏற்படும் என்பதாகும். கல்வி வழங்க முடியாத போது உற்பத்தி வீழ்ச்சியும், வறுமையும் பரவத்தொடங்கிவிடும்.*

*இந்தவகையில் கல்விக்கும் வறுமைக்குமான தொடர்பு இருநிலைப்பட்டதாகும். கல்வி குறைவாக இருப்பின் வறுமைக்குட்படுவர். குடும்பங்களின் பின்தங்கிய பொருளாதார நிலமையானது வறுமையினைத் தோற்றுவிக்கின்றது.*

*இவ்வகையில் நோக்கும் போது 1945 இலிருந்து இலவசக் கல்வியை புகட்டிவரும் இலங்கையில் 1978ம் ஆண்டு நடைமுறையில் இருக்கும் அரசியல் யாப்பின் உறுப்புரை 27 பிரிவு எழுத்தறிவின்மையை முழுவதும் ஒழிப்பது அனைத்து மக்களுக்கும் பரவலான மற்றும் சமமான கல்வியை எல்லா மட்டங்களிலும் பெறுவதற்கான உரிமையை உறுதிப்படுத்துகின்றது. இலங்கையில் அரசாங்கம் கணிசமான தொகையினை பாடசாலைக் கல்விக்கு செலவிடுகின்ற போதும் கல்வி*

முறையின் ஒவ்வொரு மட்டத்திலும் குறைபாடுகள் உள்ளன என பொதுக்கல்வி சீர்திருத்தங்கள் பற்றிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொன்னாவெளி கிராமசேவகர் பிரிவு ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வு பிரதேசத்தின் மொத்த பரப்பளவு 10332 சதுர ஹெக்ரேயர்களாகும். அத்துடன் 517 குடும்பங்களையும் 1930 குடித்தொகையையும் கொண்டதாகும். பின்தங்கிய குடும்ப பின்னணியை கொண்ட மாணவர்கள் அதிகம் கல்வி கற்பதால் இப்பிரதேசம் ஆய்வு பிரதேசமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.




மூலம்: பூநகரி பிரதேச செயலர் பிரிவு

இப்பிரதேசத்திலுள்ள குடும்பங்களின் பின்தங்கிய நிலை அதாவது நடைமுறை வருமானம் குறைவாக காணப்படுதல் இப்பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

**ஆய்வின் நோக்கம் மற்றும் ஆய்வின் கருதுகோள்**

இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக பாடசாலை மாணவர்களின் கல்வியில் பொன்னாவெளி கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட குடும்பங்களின் பொருளாதார காரணிகள் ஏற்படுத்தும் தாக்கத்தினை அறிந்து கொள்வதாகும். ஆய்வின் உபநோக்கமாக மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் சமூக காரணிகளின் தாக்கத்தினை இனங்காணல்.

***கருதுகோள் – 01***

*மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தினை தீர்மானிப்பதில் குடும்பங்களின் பொருளாதார காரணிகள் நேர்கணியமானதும் குறிப்பிடத்தக்கதுமான தாக்கத்தினை செலுத்துகின்றது.*

***கருதுகோள் – 02***

*மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தினை தீர்மானிப்பதில் குடும்பங்களின் சமூக காரணிகள் நேர்கணியமானதும் குறிப்பிடத்தக்கதுமான தாக்கத்தினை செலுத்துகின்றது.*

**ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகளின் மீளாய்வு**

*Joseph.M Williams et.al (2018) போன்றோரால் குறைந்தவருமானம் கொண்ட வறுமையில் வாழும் மாணவர்களின் பாடசாலை செயற்பாடுகளையும் கல்விசார் அடைவினையும் ஊக்குவிப்பது தொடர்பாக அமெரிக்காவினை மையமாககொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டதாகும். குறித்த ஆய்விற்கு Stratified purposeful Sampling மூலமும் பண்புரீதியான in-depth understanding, Perspectives மற்றும் நேர்காணல் மூலமும் தரவுகள் பெறப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முடிவாக குறைந்தவருமான பின்னணியைக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது இவர்களுக்கும் உயர்வருமான மாணவர்களின் கல்விமட்டத்திற்கும் இடையில் இடைவெளி காணப்படும். குறைந்த வருமான பின்னணியில் இருந்து பாடசாலைக்குவரும் மாணவர்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் மற்றும் சவால்களை கண்டறிவதன் மூலம் அவற்றை நிவர்த்தி செய்யும் கொள்கைகளை மறுபரிசீலணை செய்வது முக்கியமாகும்.*

*Aturupane Harsha et.al (2018) என்பவர்களால் குடும்ப பின்னணி, மாணவர்களின் கல்விச் செயற்திறன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது இலங்கையை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. விபரண புள்ளிவிபரவியல் இவ்வாய்விற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்களின் கல்விசார் அடைவுமட்டத்தினை அளவிடப்பயன்படும் ஒரு மாறியாக குடும்பவருமானம் கருத்திற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வின் முடிவாக உயர்ந்த சமூக பொருளாதார அந்தஸ்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் IAB பள்ளிகளில் கற்பதற்கான வாய்ப்பினை அதிகம் கொண்டவர்களாகவும் குறைந்த சமூக பொருளாதார சூழலைக்*

*கொண்ட மாணவர்களுக்கு இப் பள்ளிகளில் கற்கும் வாய்ப்பு குறைவாக இருப்பதும் கண்டறியப்பட்டது.*

*Arunatilake. N (2000) என்பவரால் பாடசாலையில் கல்வி மீதான பங்கேற்பு குறைவாக இருப்பதற்கான காரணங்கள் தொடர்பாக இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் ஒருங்கிணைந்த கணக்கெடுப்பின் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் கிராமநகரம் உட்பட 5-14 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களை கொண்ட 7500 குடும்பங்களிடம் இருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டது. அளவுரீதியான முறைகளான விபரணப்புள்ளிவிபரவியல், இணைவுக்குணகம், பிற்செலவுப் பகுப்பாய்வு கருவிகள் பயன்படுத்தப்பட்டது. இவ்வாய்வின் முடிவானது பாடசாலை மாணவர்கள் பல காரணங்களுக்காக பாடசாலைக்கு வெளியே இருக்கின்றனர். இதில் வறுமை பிரதான காரணியாகும்.*

*Fareedha M.R.F & Fareed Mohamed.N (2020) போன்றோரால் மாத்தளை கல்விவலய முஸ்லிம் ஆண் மாணவர்களின் உயர்கல்வி பங்குபற்றல் தொடர்பாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. குறித்த ஆய்விற்கு வினாக்கொத்து, நேர்காணல் மூலம் 1ம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டது. அளவு ரீதியான நூற்றுவீதம், விவரணப்புள்ளிவிபரவியல் நுட்பங்களை கொண்டு தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின் முடிவாக 63% ஆண் மாணவர்கள் தமது உயர்தர கற்கையினை முடித்தவுடன் உயர்கல்வியில் ஈடுபடாமல் தொழிலில் ஈடுபட ஆர்வம் காட்டியிருந்தனர். 3ம் நிலைக்கல்வி தொடர்பான குறைவான விழிப்புணர்வு உயர்கல்வியில் ஆண் மாணவர்களின் குறைவான பங்குபற்றலுக்கு காரணமாக கண்டறியப்பட்டது.*

**ஆய்வு முறையியல்**

*"மாணவர்களின் கல்வி மீது குடும்பங்களின் பொருளாதார, சமூக நிலை ஏற்படுத்திய தாக்கம்" எனும் ஆய்வானது பண்பு ரீதியான மற்றும் அளவு ரீதியான ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடைமுறையில் ஒரு ஆய்வினை முழுக்குடியையும் பயன்படுத்தி செம்மையாகவும் வினைத்திறமையாகவும் செய்து முடிப்பதென்பது மிகவும் கடினமான முறையாகும். இவ்வாய்விற்காக பொன்னாவெளி கிராசேவகர் பிரிவினுள் உள்ளடக்கப்படும் இரண்டு பாடசாலைகளிலிருந்தும் தலா 140 குடும்பங்கள் என்ற அடிப்படையில் மொத்தகுடி 280 குடும்பங்களாகும். தெரிவு செய்யப்பட்ட 2 பாடசாலைகளிலுமுள்ள*

அனைத்து வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களிடமும் எளிய எழுமாற்று அடிப்படையில் ஒரு பாடசாலையில் இருந்து 50% என்ற அடிப்படையில் 70 மாதிரிகளும் மற்றைய பாடசாலையில் இருந்து 70 மாதிரிகளும் மொத்தமாக 140 மாதிரிகள் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளாகிய இருவகைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்காக கருத்திற் கொள்ளப்பட்ட மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தினை தீர்மானிக்கும் பொருளாதார மற்றும் சமூக காரணிகள் 5 Point Likert Scale (1-பூரணமாக ஏற்றுக்கொள்ளவில்லை, 2 -ஏற்றுக்கொள்ளவில்லை, 3-நடுநிலமை, 4- ஏற்றுக்கொள்கிறேன், 5- பூரணமாக ஏற்றுக்கொள்கிறேன்) முறையில் SPSS கணனி மென்பொருளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.


## தரவுப் பகுப்பாய்வும் பெறுபேறுகளும்

### விபரண ரீதியான பகுப்பாய்வும் பெறுபேறுகளும்

#### வருமானம்

ஆய்வு பிரதேசத்திலுள்ள மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் பெற்றோரின் நடைமுறை வருமானம் முக்கிய பங்கு வகிக்கின்றது. குடும்பங்கள் பெற்றுக்கொள்ளும் வருமானத்தினை பொறுத்து மாணவர்களின் கல்வி அடைவுமட்டமும் வேறுபடுகிறது. குடும்பங்களின் மாதாந்த வருமானம் குறைவாக காணப்படுவதனால் குறித்த வருமானத்தில் குடும்பத்திலுள்ள அனைத்து பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளையும் பூர்த்தி செய்ய முடியாதநிலை நிலவுகிறது. மாதாந்தம் பெற்றுக்கொள்ளும் வருமானமானது ரூபா அடிப்படையில் அளவிடப்படுகிறது.

வரைபடம் 5.1. ஆய்வு பிரதேச மக்களின் மாதாந்த வருமான பரம்பல் (வீதங்களில்)




*மூலம்: கள ஆய்வு 2021*

***ஏனைய சொத்துக்கள்***

*ஆய்வு பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் பெறுமதி தாக்கம் செலுத்துகிறது. அதாவது வருமானம் தவிர்ந்து ஏனைய அசையும் மற்றும் அசையாச்சொத்துக்களின் பெறுமதி ரூபா அடிப்படையில் அளவிடப்படுகிறது.*

*வரைபடம் 5.2 . ஆய்வு பிரதேச மக்களின் ஏனைய சொத்துக்களின் பெறுமதி*





*மூலம்: கள ஆய்வு 2021*

**சேமிப்பு**

*ஆய்வு பிரதேசத்திலுள்ள மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் பெற்றோர்களின் சேமிப்பு முக்கியபங்கு வகிக்கின்றது. இப்பிரதேச மக்கள் முறைசாராத வகையில் சீட்டு பிடித்தல், குழு சேமிப்பு என்ற அடிப்படையில் சேமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் மாதாந்த வருமானத்தில் சேமிக்கும் அளவானது ரூபா அடிப்படையில் அளவிடப்படுகிறது.*

வரைபடம் 5.3 .ஆய்வு பிரதேச மக்களின் மாதாந்த சேமிப்பு பரம்பல்




மூலம்: கள ஆய்வு 2021

**தரவுப் பகுப்பாய்வு**

இவ் ஆய்வானது பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொன்னாவெளி கிராமசேவகர் பிரிவிலுள்ள இரண்டு பாடசாலைகளிலும் உள்ள மாணவர்களின் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தினை தீர்மானிப்பதில் குடும்பங்களின் பொருளாதார, சமூக காரணிகளின் பங்களிப்பானது பிற்செலவு பகுப்பாய்வின் மூலம் விளக்கப்பட்டுள்ளது. கருதுகோளானது ஆய்வு பிரதேசத்திலுள்ள மாணவர்கள் கல்விகற்கும் 280 குடும்பங்களில் இருந்து ஆய்விற்குட்படுத்தப்பட்ட 140 குடும்பங்களிடம் பெறப்பட்ட தரவுகளின் பெறுபேறுகள் அடிப்படையில் பரிசோதனை செய்யுமிடத்து ஆய்வு பெறுபேறுகளுக்கும், கருதுகோளுக்குமிடையிலான பொருத்தப்பாட்டினை அறிந்துகொள்ளமுடியும்.

ஆய்வின் நம்பகத்தன்மையினை (Reliability) அறியும் பொருட்டு இப் பரிசோதனையானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. குரோன்பாச் அல்பா (Cronbach Alpha) பெறுமதியானது 70% மேல் காணப்படுமாயின் மாதிரியினை பகுப்பாய்விற்குட்படுத்தமுடியும். அந்தவகையில் ஏழு சாராமாறிகளும் ஏறத்தாழ (Cronbach’s Alpha Based on Standardized items 0.894) 89% தாக்கம் செலுத்துகின்றன. எனவே இம் மாறிகளை ஆய்விற்கு பயன்படுத்தமுடியும் என்பதை இவ் நம்பகத்தன்மை பரிசோதனையானது உறுதிப்படுத்துகின்றது.

**ஆய்வு கருதுகோள் - 01**

*$H1_a$ : பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் பொன்னாவெளி கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட குடும்பங்களின் பொருளாதார காரணிகள் நேர்கணியமானதும் குறிப்பிடத்தக்களவுமான தாக்கத்தினை செலுத்தியுள்ளன.*

*பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தினை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்தும் பொருளாதார காரணிகளை பின்வருமாறு நோக்கலாம்.*

$EDU = \beta_0 + \beta_1 CIN + \beta_2 ASS + \beta_3 SAV + U_1$

*EDU - பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டம்*

*ஆய்விற்குட்படுத்தப்பட்ட மாணவர்கள் இறுதியாக தோற்றிய தவணைப்பரீட்சை புள்ளிகளின் சராசரியினை அடிப்படையாக கொண்டு அளவிடப்படுகிறது.*

*CIN – குடும்பங்களின் நடைமுறை வருமானம்*

*குடும்பங்கள் மாதாந்தம் பெற்றுக்கொள்ளும் வருமானமானது ரூபா அடிப்படையில் அளவிடப்படுகிறது.*

*ASS – குடும்பத்திலுள்ள ஏனைய சொத்துக்கள்*

*மாதாந்த வருமானம் தவிர்ந்து ஏனைய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் மூலம் மாதாந்தம் பெற்றுக்கொள்ளும் வருமானமானது ரூபா அடிப்படையில் அளவிடப்படுகிறது.*

*SAV– சேமிப்பு மட்டம்*

*மாதாந்த வருமானத்தில் சேமிக்கும் அளவானது ரூபாவில் அளவிடப்படுகிறது.* *UI- ஏனையவை*

*இங்கு பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தில் குடும்பங்களின் பொருளாதார காரணிகள் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினை செலுத்தியுள்ளன என எதிர்பார்க்கப்படுகிறது.*

அட்டவணை 5.1 . மாதிரி சுருக்கம்

| ***Model*** | ***R*** | ***R Square*** | ***Adjusted R Square*** | ***Std.Error of the Estimate*** |
|---|---|---|---|---|
| *1* | *.853*[a] | *.789* | *.756* | *.373* |

மூலம்: கள ஆய்வு 2021

இவ்வாய்வின் முடிவின்படி துணிவுக்குணகம் *(R2) = 0.789* ஆகும். இதனடிப்படையில் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட சாரா மாறிகளான குடும்பங்களின் நடைமுறை வருமானம், குடும்பத்திலுள்ள ஏனைய சொத்துக்கள் மற்றும் சேமிப்பு மட்டம் போன்றன ஏறத்தாழ *78%* மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தில் தாக்கம் செலுத்துகின்றன. அதேவேளை ஏனைய காரணிகள் *22%* தாக்கத்தினை கொண்டுள்ளன. அத்துடன் சரிசெய்யப்பட்ட துணிவுக்குணகத்தின் பெறுமதி ஏறத்தாழ *75%* ஆக *(Fitness of Model)* காணப்படுகிறது. எனவே இம் மாதிரியானது அதிக பொருத்தப்பாட்டினை கொண்டு விளங்குகின்றது.

அட்டவணை 5.2 இணைவுப்பகுப்பாய்வு

| | ***Students Average Marks*** |
|---|---|
| குடும்பங்களின் நடைமுறை வருமானம் *Pearson Correlation*<br>*Sig. (2-tailed)* | *.720***<br>*.001* |

மூலம்: கள ஆய்வு 2021

அட்டவணை 5.3 . குணகம்

| *Model* | | *Unstandardized Coefficients* | | *t* | *Sig.* |
|---|---|---|---|---|---|
| | | *B* | *Std. Error* | | |
| *1* | *(Constant)* | *.347* | *.273* | *2.812* | *.001* |
| | நடைமுறை வருமானம் | *.659* | *.099* | *5.340* | *.001* |
| | சொத்துக்கள் | *.305* | *.074* | *4.520* | *.002* |
| | சேமிப்பு | *.582* | *.090* | *5.491* | *.004* |

$$EDU = 0.347 + 0.659CIN + 0.305ASS + 0.582SAV$$

பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தினை தீர்மானிப்பதில் பொருளாதார காரணிகள் நேர்கணியமான தொடர்பினை கொண்டிருக்கின்றன. குடும்பங்களின் நடைமுறை வருமானத்தின் 1 அலகு அதிகரிப்பானது பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தில் 0.659 அலகு அதிகரிப்பினை ஏற்படுத்தும் எனவும் குடும்பத்திலுள்ள ஏனைய சொத்துக்களின் 1 அலகு அதிகரிப்பானது பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தில் 0.305 அலகு அதிகரிப்பினை ஏற்படுத்தும் எனவும் சேமிப்பு மட்டத்தின் 1 அலகு அதிகரிப்பானது பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தில் 0.582 அலகு அதிகரிப்பினை ஏற்படுத்தும் எனவும் முடிவு பெறப்பட்டுள்ளது.

இப் பிற்செலவு பகுப்பாய்வின் மாறிகளான குடும்பங்களின் நடைமுறை வருமானம், குடும்பத்திலுள்ள ஏனைய சொத்துக்கள் மற்றும் சேமிப்பு மட்டம் ஆகியவற்றின் நிகழ்தகவு பெறுமதி (P value) முறையே 0.001, 0.023, 0.021 ஆக காணப்படுகின்றன. இவை 5% பொருண்மை மட்டத்தினை விட சிறியதாக காணப்படுவதால் இவை சார் மாறியான பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தின் மீது நேர்கணியமானதும் குறிப்பிடத்தக்கதுமான தாக்கத்தினை செலுத்துகின்றது.

*5 Point Likert Scale* பகுப்பாய்வு கருவியின் பயன்பாட்டிலிருந்து பெறப்பட்ட சராசரி பெறுமதி பின்வரும் எல்லைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 5.4: தீர்மான முடிவுகள்

| வீச்சு | தீர்மான முடிவுகள் |
|---|---|
| $1 \leq Xi \leq 2.5$ | குறைந்த மட்டம் |
| $2.5 < Xi \leq 3.5$ | நடுத்தர மட்டம் |
| $3.5 < Xi \leq 5$ | உயர்ந்த மட்டம் |

மூலம்: கள ஆய்வு 2021

அட்டவணை: 5.5 .விபரண புள்ளிவிபரவியல்

| மாறிகள் | சராசரி |
|---|---|
| குடும்பங்களின் நடைமுறை வருமானம் | 4.04 |
| குடும்பத்திலுள்ள ஏனைய சொத்துக்கள் | 3.74 |
| சேமிப்பு மட்டம் | 3.92 |

இதனடிப்படையில் பொருளாதார காரணிகள் தொடர்பாக கேட்கப்பட்ட ஐந்து கூற்றுக்களினதும் சராசரிப் பெறுமதியானது முறையே 4.04, 3.74, 3.92 ஆக காணப்படுகின்றது. இவற்றின்; சராசரி பெறுமானம் $3.5 < Xi \leq 5$ எனும் வீச்சினுள் காணப்படுகின்றமையால் பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் பொருளாதார காரணிகளான குடும்பங்களின் நடைமுறை வருமானம், ஏனைய சொத்துக்கள், சேமிப்பு மட்டம் என்பனஉயர்ந்தமட்ட தாக்கத்தினை செலுத்துகின்றன. (*Tao Lin & Han LV,2017*) எனவே தொகுத்து நோக்கினால் அளவு ரீதியானதும், பண்பு ரீதியானதுமான முடிவுகளின் அடிப்படையில் பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் பொருளாதார காரணிகள் நேர்கணியமானதும் குறிப்பிடத்தக்கதுமான

*தாக்கத்தினை செலுத்துகின்றன என்ற சூனிய கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.*

**ஆய்வு கருதுகோள் *-02***

*$H2_a$ : பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் பொன்னாவெளி கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட குடும்பங்களின் சமூக காரணிகள் நேர்கணியமானதும் குறிப்பிடத்தக்கதுமான தாக்கத்தினை செலுத்தியுள்ளன.*

*பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தினை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்தும் சமூக காரணிகளை பின்வருமாறு நோக்கலாம்.*

$$\mathbf{EDU = \beta_0 + \beta_1 PED + \beta_2 PE + \beta_3 PM + \beta_4 SP + U_2}$$

*EDU – பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டம்*

*PED - பெற்றோர் மற்றும் சகோதரர்களின் கல்வித்தகமை*

*PE- குடும்ப சூழல் FM – அதிபர் மற்றும் ஆசிரியர்களின் முகாமைத்துவம்*

*SP- பாடசாலையிலுள்ள வளங்கள் U2 – ஏனையவை*

*இங்கு பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் சமூக காரணிகள் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினை செலுத்தியுள்ளன என எதிர்பார்க்கப்படுகிறது.*

*அட்டவணை 5.6 மாதிரி சுருக்கம்*

| ***Model*** | ***R*** | ***R Square*** | ***Adjusted R Square*** | ***Std.Error of the Estimate*** |
|---|---|---|---|---|
| *1* | *.852[a]* | *.806* | *.792* | *.417* |

*இங்கு பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் சமூக காரணிகள் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினை செலுத்தியுள்ளன என எதிர்பார்க்கப்படுகிறது.*

அட்டவணை 5.7 குணகம்

| *Model* | | *Unstandardized Coefficients* | | *T* | *Sig.* |
|---|---|---|---|---|---|
| | | *B* | *Std. Error* | | |
| *1* | *(Constant)* | *.482* | *.218* | *1.801* | *.002* |
| | பெற்றோர் கல்வித்தகமை | *.560* | *.089* | *5.031* | *.001* |
| | குடும்ப சூழல் | *.402* | *.031* | *4.490* | *.002* |
| | அதிபரின் முகாமைத்துவம் | *.158* | *.098* | *1.624* | *.004* |
| | பாடசாலையிலுள்ள வளங்கள் | *.227* | *.079* | *2.861* | *.003* |

*மூலம்: கள ஆய்வு 2021*

*EDU = 0.482 + 0.560PED + 0.402PE + 0.158PM + 0.227SP*

*இம் மாதிரியின்படி பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தினை தீர்மானிப்பதில் மேற் குறிப்பிட்ட சமூக காரணிகள் நேர்கணியமான தொடர்பினை கொண்டிருக்கின்றன. இங்கு பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தில் செல்வாக்கு செலுத்தும் சமூக காரணிகளான பெற்றோர் மற்றும் சகோதரர்களின் கல்வித்தகமை, குடும்ப சூழல், அதிபர் மற்றும் ஆசிரியர்களின் முகாமைத்துவம், பாடசாலையிலுள்ள வளங்கள் என்பனவற்றின் 1 அலகு அதிகரிப்பானது பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தில் முறையே 0.560, 0.402, 0.158, 0.287 அலகு அதிகரிப்பினை ஏற்படுத்தும் எனவும் முடிவு பெறப்பட்டுள்ளது. இம் மாதிரியின்படி பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தினை தீர்மானிப்பதில் மேற் குறிப்பிட்ட சமூக காரணிகள் நேர்கணியமான தொடர்பினை கொண்டிருக்கின்றன.*

*அட்டவணை 5.8. விபரண புள்ளிவிபரவியல்*

| *மாறிகள்* | *சராசரி* | *நியம விலகல்* |
|---|---|---|
| *பெற்றோர் மற்றும் சகோதரர்களின் கல்வித்தகமை* | *3.97* | *0.4381* |
| *குடும்ப சூழல்* | *3.96* | *0.4335* |
| *அதிபர் மற்றும் ஆசிரியர்களின் முகாமைத்துவம்* | *3.85* | *0.6606* |
| *பாடசாலையிலுள்ள வளங்கள்* | *3.87* | *0.4660* |

*மூலம் : கள ஆய்வு 2021*

*இதனடிப்படையில் பெற்றோர் மற்றும் சகோதரர்களின் கல்வித்தகமை, குடும்பசூழல், அதிபர் மற்றும் ஆசிரியர்களின் முகாமைத்துவம், பாடசாலையிலுள்ள வளங்கள் தொடர்பாக 5 point likert scale இல் கேட்கப்பட்ட ஐந்து கூற்றுக்களினதும் சராசரிப் பெறுமதியானது முறையே 3.97, 3.96, 3.85, 3.87 என்பனவாக காணப்படுகின்றது. இவற்றின் சராசரி பெறுமானம்* $3.5 < Xi \le 5$ *எனும் வீச்சினுள் காணப்படுகின்றமையால் பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் சமூக காரணிகள் உயர்ந்தமட்ட தாக்கத்தினை செலுத்துகின்றன. எனவே பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் சமூக காரணிகள் நேர்கணியமானதும் குறிப்பிடத்தக்கதுமான தாக்கத்தினை செலுத்துகின்றன என்ற சூனிய கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது*

**தொகுப்புரையும் பரிந்துரையும்**

*நாட்டின் அபிவிருத்திக்கு தடையாக காணப்படுகின்ற விடயங்களில் நடைமுறை வருமானத்தின் பற்றாக்குறையும், வறுமையும் உள்ளடக்கப்படுகின்றது. இதனடிப்படையில் 1945 இல் இலவச கல்வித்திட்டம் உருவாக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக பல்வேறு இலவச திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.*

இவ்வாய்வின் கண்டுபிடிப்புக்களாக, ஏறத்தாழ 60% ஆன குடும்பங்கள் 30000 இற்கும் மேற்பட்ட தொகையினை மாதாந்த வருமானமாக பெற்றுக்கொள்கின்றனர். ஏறத்தாழ 36.5% ஆன குடும்பங்களின் ஏனைய சொத்துக்களின் பெறுமதி 200000 இற்கும் மேற்பட்டதாக காணப்படுகிறது. ஏறத்தாழ 55% ஆனவர்களின் மாதாந்த சேமிப்பு தொகையானது 2500 ரூபாவிற்கும் மேற்பட்டதாக காணப்படுகிறது. ஏறத்தாழ 55% ஆன மாணவர்கள் 60 இற்கும் மேற்பட்ட சராசரி புள்ளிகளை தவணைப் பரீட்சைகளில் பெற்றுக் கொள்கின்றனர்.

## கொள்கைப் பரிந்துரைகள்

பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் பட்சத்தில் திறமையான ஆசிரியர் நியமனம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல். நடைமுறை வருமானம் குறைந்த வறியநிலையில் உள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு தேவையான உதவிகளை பெற்றுக்கொடுத்து கல்விச் செயற்பாடுகளை தொடர நடவடிக்கை எடுத்தல்.

பிரதான வீதியினை புனரமைப்புச் செய்வதன் மூலம் ஏனைய மாவட்டங்களிலிருந்து வருகைதரும் ஆசிரியர்கள் விரைவாக போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட நடவடிக்கை எடுத்தல். மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு தேவையான நூலகவசதி, விஞ்ஞான ஆய்வு கூடம், கணனி ஆய்வு கூடம் என்பன அமைக்கப்பட்டு போதியளவு வசதிகளுடன் இயங்க நடவடிக்கை எடுத்தல்.

எனவே தொகுத்து நோக்கும் போது பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை தீர்மானிப்பதில் ஆய்வு பிரதேசத்திலுள்ள குடும்பங்களின் பொருளாதார மற்றும் சமூக காரணிகள் அதிக தாக்கத்தினை செலுத்துகின்றமை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

## துணை நூற் பட்டியல்


Abayasekara, A. et al. (2017) 'Better schools for better o- level results in Sri Lanka', Human Resources Development Series No.6, 5(4), pp. 1-24.

Arunatilake, N. (2006) 'Education participation in Sri Lanka - why all are not in school', International Journal of Educational Research, 45(3), pp. 137-152.

Aturupane, H. et al. (2018) 'Family background school choice and students academic performance evidence from Sri Lanka', Discussion Paper No.1811, 21(1), pp. 2-20.

Aturupane, H.P. et al. (2013) 'The impact of school quality socio- economic factors and child health on student's academic performance: evidence from Sri Lankan primary schools', Education Economics, 21(1), pp. 2-37.

Beblo, M. et al. (2004) ‘Do family resoures matter? educational attainment during transition on Poland’, Economic of Transition,12(3), pp. 537-558.
Beth, A. et al. (2015) ‘Academic performance gaps and family income in a rural elementary school perceptions of low - income parents’, Education Leadership Review of Doctoral Research, 2(2), pp. 70-83.
Chima , H.M. et al. (2017) ‘The impact of parental level of income on students academic performance in high school in Japan’, University Journal of Educational Research, 5(9), pp. 1614-1620.
Fareedha , M.R.S.F. et al . (2020) ‘Participation of Muslim male students of Matale education zone in higher education’, Muallim Journal of Social Science and Humanities, 4(2), pp. 17-32.
Ferguson, H.B. et al. (2007) ‘The impact of poverty on educational outcomes for children’, Paediatrrics & Child Health,, 12(8), pp. 701-706.
Gange, T. et al . (2008) ‘Educational opportunities for the poor in Sri Lanka: assessing spatial disparties’, Human Resources Development Series No.5, 9(3), pp. 1-63.
Haiyan, Z. et al. (2014) ‘Improving strategies for low-income family children's information literacy’, Universal Journal of Educational Research, 2(9), pp. 655-658.
Joseph , M. et al . (2018) ‘High achieving low - income student's perspectives of how schools can promote the academic achievment of students living in poverty’, Institute of Eduction Sciences, 22(3) , pp. 224-236.
Mawathage, D. J. S. et al. (2016) ‘Influence of family background on children's education: a small pilot sample from Sri Lanka’, Open Journal of Social Science Humanities and Education, 1(1, 4-8), pp. 1-15.
Morrissey, T.W. et al. (2013) ‘Family income school attendance and academic achievment in elementary school’, Developmental Paychology, 50(3), pp. 1-12.
Nisha, A. et al. (2000) ‘Better schools for better O - level results in Sri Lanka’, Human Resource Development Seris No.6, 5(4), pp. 1-21.
Rufan, L. et al. (2019) ‘Children's literacy experiences in low - income families: the content of books matters’, Reading Research Quarterly, 55(2), pp. 213-233.
Spyros, K. et al. (2011) ‘Family background and school effects on student achievment: a multilevel analysis of the coleman data’, Teachers College Record, 113(1), pp. 97-132.
Tao, L. et al. (2017) ‘The effects of family income on children's education: an emprical analysis of cltns data’, Research Modern Education, 4(1), pp. 49-53.